உ

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை



# அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில்

## (1427)

குதிரைமொழிகிராமம், தேரிக்குடியிருப்பு,
திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்

## 2017ம் ஆண்டு கள்ளர் வெட்டு திருவிழா அழைப்பிதழ்



"தாரணிநற் குதிரைமொழி சார் தேரிக்குடியிருப்பில் தழைத்தே ஓங்கும் காரணிநற் சோலைவனக்
கோயிலே திருவருளின் காட்சி நல்கிப் பூரணைநற் பொற்கலையும் புடை சூழப்புவனவுயிர்
அனைத்தும் காக்கும் காரணனே ! கற்குவே லய்யனே எங்களையுங் காப்பாய் போற்றி"

உ

# அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில்

## குதிரைமொழி கிராமம், தேரிக்குடியிருப்பு,
## தூத்துக்குடி மாவட்டம் - 628 205.

tnhrce.org

பேரன்புடையீர்!

செந்தமிழ் நாட்டின் தென்பகுதியில் திருச்செந்தூர் திருத்தலத்திற்கு தென்மேற்கே காயாமொழி அருகில், தேரிக்குடியிருப்பை ஒட்டியுள்ள குதிரைமொழி கிராம வனப்பகுதியில் மிகவும் தொன்னெடுங் காலம் முதல் அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருத்தலம் எழிலுடன் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தைச் சுற்றிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க செம்மண் தேரிக்குன்றுகள் அரண் போலவும், கோட்டைச் சுவர் போலவும் அமைந்துள்ள காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

வனப்பகுதியில் சுமார் 152.78 ஏக்கர் நிலத்தை தன்னுடைமையாகக் கொண்டு இவ்வாலயம் அமைந்துள்ளது. எழில் கொஞ்சும் இந்த வனப்பகுதியில் அய்யனின் அருள் ஒரு காட்டாற்று வெள்ளம் போல் ஆனந்த வீச்சுடன் வெளிப்பட்டு, அய்யனின் பொற்பாதம் பற்றிய அனைவரையும் தழைத்துச் செழிப்படையச் செய்கிறது. அய்யன் இங்கு பூரணம், பொற்கலை ஆகிய இரு தேவியருடன் அமர்ந்த நிலையில் அருள்பாலிக்கின்றார். அய்யன் மட்டுமல்லாது பேச்சியம்மன், சுடலைமாடன், பெரியாண்டவர், வன்னியராஜா, பொன்காத்த அய்யன் போன்ற கணக்கற்ற வன தேவதைகளும் இங்கு எழுந்தருளி அருள் நலம் வழங்குகின்றனர்.

இயற்கை எழில் கொஞ்சும் இந்த இடத்தில் " கற்குவா " என்ற மரத்தில் அய்யன் தோன்றி அற்புதங்கள் நிகழ்த்திக்காட்டியதால் " கற்குவா " + அய்யன் = கற்குவா அய்யன் என்றழைக்கப்பட்டார். இச்சொல் காலப்போக்கில் கற்குவாலய்யன், கற்குவேலய்யன், கருக்குவாள் அய்யன், கருக்குவாலை அய்யன், கற்கோலய்யன் எனப் பலவாறாக மருவிற்று.

அநீதிகள் தலைதூக்கிய போது அதனை அழித்து நீதியை நிலை நிறுத்தினார் அய்யன். அந்த நாளே கள்ளர் வெட்டு நாளாக கொண்டாடப்படுகிறது. கார்த்திகை முதல் நாளில் தொடங்கும் இவ்விழா 30வது நாளில் கள்ளர் வெட்டு நாளாக மலர்கிறது.

இத்தகைய சிறப்பு மிக்க இந்த ஆலயத்தின் கள்ளர்வெட்டுத் திருவிழா நாளது ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 1 ஆம் தேதி (17.11.2017) வெள்ளிக்கிழமை தொடங்கி மார்கழி மாதம் 1ஆம் தேதி (16.12.2017 சனிக்கிழமை) கள்ளர்வெட்டு நிகழ்ச்சியுடன் விழா நிறைவுபெறுகிறது. இவ்விழாவில் பக்தர்கள் அனைவரும் மன ஒருமையுடன் பங்கு கொண்டும், காணிக்கைகளை செலுத்தியும் கற்குவேல் அய்யனாரின் அருள் பெற அன்புடன் வேண்டுகிறோம்.

**செல்வி. தி.சு. ரோஜாலி சுமதா** பி.ஏ.,பி.எல்.,எம்.எல்.,
உதவி ஆணையர்

**அ.தி.பரஞ்ஜோதி** எம்.காம்.,பி.எல்.,
இணை ஆணையர்

**க.விஸ்வநாத்** பி.ஏ.,பி.எல்.,
தக்கார்

**சி.இசக்கியப்பன்** பி.எஸ்,சி.,
செயல் அலுவலர்

உ

# கள்ளர் வெட்டு திருவிழா நிகழ்ச்சி நிரல்

## 17.11.2017 (கார்த்திகை மாதம் 1ம் தேதி) வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| கார்த்திகை மாதப்பிறப்பு | : | கள்ளர் வெட்டு திருநாள் ஆரம்பம் |
| பகல் 12.00 மணிக்கு | : | சிறப்பு அபிஷேக ஆராதனைகள் |
| பகல் 12.30 மணிக்கு | : | அன்னதானம் |
| சிறப்பு கட்டளைதாரர் | : | திரு. வீ.சக்கரை நாடார் & குடும்பத்தினர், தூத்துக்குடி. |
| 17.11.2017 முதல் 16.12.2017 | : | தினசரி சிறப்பு பூசை, வில்லிசை நிகழ்ச்சி |
| வில்லிசை நிகழ்த்துபவர் | : | தேரிக்குடியிருப்பு ஆ.முருகன் பிள்ளை(குழுவினர்) |

## 14.12.2017 (கார்த்திகை மாதம் 28ம் தேதி) வியாழக்கிழமை

| | | |
|---|---|---|
| பகல் 11.00 மணிக்கு | : | ஐவராஜா – மாலையம்மன் பூசை |
| சிறப்பு கட்டளைதாரர் | : | ஐவராஜா குடும்பத்தினர், பாளையங்கோட்டை. |
| மாலை 6.00 மணிக்கு | : | சிறப்பு அபிஷேக ஆராதனைகள் |
| சிறப்பு கட்டளைதாரர் | : | திரு. ர. கருப்பையா நாடார் & குடும்பத்தினர், தேனி. |
| இரவு 9.00 மணிக்கு | : | மாக்காப்பு தீபாராதனை |
| சிறப்பு கட்டளைதாரர் | : | திரு. தே.மா.காமாட்சி நாடார் & குடும்பத்தினர்<br>திரு. தே.மா.கா.தெய்வகிருஷ்னன் நாடார் & குடும்பத்தினர், சின்னமனூர்,தேவாரம். |

## 15.12.2017 (கார்த்திகை மாதம் 29ம் தேதி) வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணிக்கு | : | மகளிர் வண்ணக் கோலமிடும் நிகழ்ச்சி |
| உபயதாரர் | : | PTC திரு. சீ.பழனிச்சாமி நாடார் – பவளத்தாய் & குடும்பத்தினர்,<br>ஏலக்காய் வியாபாரம், திருமலாபுரம்,போடி. |
| காலை 11.00 மணிக்கு | : | சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் |
| கட்டளைதாரர் | : | திரு. வே.வெ.ஆறுமுகசாமி நாடார் & குடும்பத்தினர், சென்னை. |
| பகல் 12.00 மணிக்கு | : | சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் |
| கட்டளைதாரர் | : | திரு. ஆ.காளியப்ப நாடார் குடும்பத்தினர், சிவகாசி. |
| மாலை 6.00 மணிக்கு | : | மாவிளக்கு பூசை |
| உபயதாரர் | : | திரு. வே.வெ.ஆறுமுகசாமி நாடார், திரு. வெ.அய்யாத்துரை நாடார்,<br>திரு. வே.வெ.வேல்முத்து நாடார், திரு. அ.ப.துரை நாடார், திரு. து.கற்குவேல் ராஜன் நாடார்,<br>திரு. த.விருத்திவிராஜன் நாடார், திரு. க.மகேஷ்பாபு நாடார், திரு. மு.மனோகரன் நாடார்,<br>திரு. வே.வெ.ரவீந்திரன் நாடார், கற்குவேல் அய்யனார் வழிபாட்டுக் குழு, சென்னை. |

tnhrce.org

உ

இரவு 7.30 மணிக்கு : திருவிளக்கு பூசை

உபயதாரர் : திரு. க.ர.கருப்பையா நாடார் நினைவாக, குடும்பத்தினர், தேனி போடி,திருமலாபுரம்,தேனி கற்குவேல் அய்யனார் வழிபாட்டுக்குழு.

இரவு 9.00 மணிக்கு : உற்சவர் திருவீதியுலா

உபயதாரர் : PTC திரு. சீ.பழனிச்சாமி நாடார் - பவளத்தாய் & குடும்பத்தினர், ஏலக்காய் வியாபாரம், திருமலாபுரம்,போடி.

## சிறப்பு நிகழ்ச்சிகள்

இரவு 8.00 மணிக்கு : பக்தி இன்னிசை விருந்து.

உபயதாரர் : தூத்துக்குடி அருள்மிகு கற்குவேல்அய்யனார் வழிபாட்டுக்குழு

## 16.12.2017 (மார்கழி மாதம் 1-ம் தேதி) சனிக்கிழமை

tnhrce.org

காலை 6.00 மணிக்கு : சென்னை வாழ் கோணாம்பட்டி நாடார் சாத்தூர் தாலுகா அருள்மிகு கற்குவேல் அய்யனார் வழிப்பாட்டுக்குழு சார்பாக 108 பால்குடம் எடுத்து வருதல்

காலை 9.00 மணிக்கு : தாமிரபரணி தீர்த்தம் வெள்ளிக்குடத்தில் எடுத்து வருதல்

உபயதாரர் : திரு. மு.கோ. சங்கரலிங்கம் நாடார் & சகோதரர்கள், விருதுநகர்.

தீர்த்தம் எடுத்து யானை மீது வருதல்

உபயதாரர் : திரு. தே.மா. காமாட்சி நாடார் & குடும்பத்தினர்
திரு. தே.மா.கா. தெய்வகிருஷ்ணன் நாடார் & குடும்பத்தினர் சின்னமனூர், தேவாரம்.

காலை 9.45 மணிக்கு : அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில் எல்லையில் இருந்து அருள்மிகு கற்குவேல் அய்யனார், அருள்மிகு பேச்சியம்மனுக்கு முளைப்பாரி எடுத்து வருதல், கற்குவேல் அய்யனார் வழிபாட்டுக் குழு, தமிழ்நாடு.

ஏற்பாடு : சாந்தி சா. வெள்ளைச்சாமி நாடார் நினைவாக கற்குவேல் அய்யனார் வழிபாட்டுக் குழு, தமிழ்நாடு.

பகல் 12.00 மணிக்கு : சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள்

உ

மாலை 4.15 மணிக்கு : **கள்ளர் வெட்டு நிகழ்ச்சி**

நையாண்டி மேளம் : திரு. பி.செல்வம் & திரு.க.இராஜேந்திரன் நாடார், ஸ்ரீ அய்யனார் ஸ்டோர்ஸ், கோட்டயம்.

செண்டா மேளம் : திரு. பு.தே.க.சேகர் – சே.தமிழரசி, பு.தே.க.சே. தீபக்ராஜசேகர் – தீ. சுகிர்தாப்ரீத்தி, தீ. தீப்தி ஜெய் மெடிக்கல்ஸ் & ஜெனரல்ஸ் & தீபக் ஷாப்பி, திண்டுக்கல்.

கும்மிவிளையாட்டு : சிந்தாமணி அ.நாராயண நாடார் மற்றும் கனகராஜ் இணைந்து நடத்தும் திரு. அன்னாவி செல்லப்பா தலைமையில்

## சிறப்பு நிகழ்ச்சிகள்

காலை 9.00 மணிக்கு சமய சொற்பொழிவு : திரு. தேசிக மூர்த்தி அவர்கள், திருச்செந்தூர்

உபயதாரர் : திரு. ச.ஜெயராஜ் நாடார் – சண்முககனி அம்மாள் & குடும்பத்தினர் அய்யனார் கேபிள், கேபிஸ், கற்குவேல் அய்யனார் மிட்டாய் வியாபாரம், தூத்துக்குடி.

காலை 10.00 மணிக்கு விளாத்திகுளம் கலைமாமணி ராஜலட்சுமி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி

உபயதாரர் : திரு. மு.பெரியண்ணன் நாடார் – திரௌபதை அம்மாள் & குடும்பத்தினர்கள், ஸ்ரீ கற்குவேல் அய்யனார் ஸ்டோர்ஸ், பழைய இரும்பு மொத்தம், சில்லரை வியாபாரம், ஆலங்குடி ரோடு, புதுக்கோட்டை

மாலை 5.00 மணிக்கு சமய சொற்பொழிவு : திரு. மோகனசுந்தரம் அவர்கள், திருச்செந்தூர்.

உபயதாரர் : திரு. சு.சோமசுந்தரம் ஆச்சாரி & குடும்பத்தினர் சாத்தான் குளம்

மாலை 6.00 மணிக்கு சமய சொற்பொழிவு : திரு. பேராசிரியர் க.மாரியப்பன் அவர்கள்,

இரவு 8.00 மணிக்கு : நாகர்கோவில் கி.மணவாளன் வழங்கும் ராகசுரபி பக்தி இன்னிசை விருந்து.

உபயதாரர் : கோவில்பட்டி நாடார், குதிரைமொழி கிராமம் அருள்மிகு கற்குவேல் அய்யனார் வழிப்பாட்டுக்குழு.

## 17.12.2017 (மார்கழி மாதம் 2–ம் தேதி) ஞாயிற்றுக்கிழமை

மாலை 4.00 மணிக்கு : முன்னடி பூசை – வில்லிசை நிகழ்ச்சி

## 23.12.2017 (மார்கழி மாதம் 8–ம் தேதி) சனிக்கிழமை

பகல் 12.00 மணிக்கு : எட்டாம் நாள் பூசை – சிறப்பு வழிபாடு

உபயதாரர் : யாதவர் பட்டறைக்காரர்

உ

| | | |
|---|---|---|
| கோயில் மற்றும் கோயிலை சுற்றியுள்ள இடங்களில் ஒலி ஒளி அமைப்பு உபயதாரர்கள் | : | திரு. பு.சங்கரன் பிள்ளை குடும்பத்தினர், ஸ்ரீ ஈஸ்வரமூர்த்தி, லாரி புக்கிங் ஆபிஸ், தூத்துக்குடி<br>திரு. பா. சுடலை நாடார் குடும்பத்தினர், சு.கற்குவேல், சுடலை ஹோட்டல், மடத்தூர், தூத்துக்குடி<br>திரு. பொ. காமராஜ் நாடார் – கா. இன்பமணி அம்மாள் குடும்பத்தினர், காய்கறி வியாபாரம், திருப்போரூர், சென்னை.<br>ஸ்ரீவிநாயகா எண்டர்பிரைசஸ் திரு.ர.கணேசன்–க.கல்பனா குடும்பத்தினர், சிவகாசி.<br>திரு. சு.தாமோதரன்–அமுதா குடும்பத்தினர், குளோப் ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ், சென்னை-79.<br>சென்னை வாழ்நாடார் அருள்மிகு கற்குவேல் அய்யனார் வழிப்பாட்டுக்குழு. |
| இலவச மருத்துவ முகாம் உபயதாரர் | : | மருத்துவர். திரு.தே.ரகுபதிராஜா எம்.பி.பி.எஸ். (எலும்பு மூட்டு மருத்துவர்)<br>சிட்டி மருத்துவமனை, மில்லர்புரம், தூத்துக்குடி-8. போன்: 0461-2311348 |
| சந்தனம் குங்குமம் உபயதாரர் | : | திரு.அ.செ.செல்வகுமார் திருமதி.செ.சசிகலா, பவித்ரா டயர்ஸ், தூத்துக்குடி-628 002. |

- திரு விழா நாட்களில் பக்தர்கள் வசதிக்காக அரசு போக்குவரத்துக்கழகம் சிறப்புப்பேருந்துகளை திருச்செந்தூரிலிருந்து கற்குவேல் அய்யனார் கோயில் வரை இயக்குகிறது.
- ஸ்ரீ கண்ணன் சிற்றுந்து திருச்செந்தூரிலிருந்து திருக்கோயில் வரை எல்லா நாட்களிலும் இயக்கப்படுகிறது பக்தர்கள் கோவிலை சுற்றி தங்கும் இடங்களில் விரிவான மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் தனிப்பட்ட எவருக்கும் மின் விளக்கு அமைக்கும் வகைக்கு பணம் வழங்க வேண்டாமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- அபிஷேக பன்னீர் திருக்கோவில் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது எனவே பிளாஸ்டிக் பாட்டில்களில் பன்னீர் அடைத்து திருக்கோயில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை பார்த்துவாங்குமாறு பக்தர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- திருவிழா அல்லாத சாதாரண நாட்களில் பக்தர்கள் வசதிக்காக கோயில் குத்தகைதாரர் மூலம் நிரந்தர கடை அமைக்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய பூசை சாமான்கள் சந்நிதி வாசலில் எந்நேரமும் வாங்கிக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

tnhrce.org

## நித்திய பூசை கட்டளை வேண்டுகோள்

ஒரு நாள் பூசை கட்டளைக்கு **ரூ.2000/-** வீதம் பெற்று இத்தொகையை முதலீடு செய்து கிடைக்கும் வட்டியிலிருந்து இக்கட்டளையை பாரம்பரியமாக நிரந்தரமாக செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த கைங்கரியத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் எந்த தேதியில் இந்த கட்டளை செய்யப்பட வேண்டுமென ஆங்கில தேதி குறிப்பிட்டு அதற்கான. **ரூ.2000/-ஐ** டிராப்ட் மூலம் செயல் அலுவலர், **அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில், குதிரைமொழி கிராமம், தேரிக்குடியிருப்பு, திருச்செந்தூர் வட்டம், அஞ்சல்– 628 205** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Web: www.karkuvelayyanartemple.tnhrce.in ☎:04639-232530

## அன்னதானத் திட்டம் வேண்டுகோள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன் கொடையாளர்கள் பங்கேற்புடன் கூடிய மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டம் இத்திருக்கோயிலில் தொடங்கி தினசரி 50 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இத்திட்ட செலவாக நாள் ஒன்றுக்கு ரூ.1500/- செலுத்தி தாங்களும் இத்திட்டத்தில் நன் கொடையாளராகப் பங்கேற்று அன்னதானம் செய்யலாம். இதனையே நிரந்தர வைப்பு நிதியாக ரூ.15,000/- முதலீடு செய்தால் ஆண்டு ஒன்றுக்கு ஒருநாள் தாங்கள் விரும்பும் நாட்களான பிறந்த நாள், திருமணநாள் என வாழ்நாளில் முக்கிய நாட்களிலும் அன்னதானம் செய்து மனநிறைவும்,இறையருளும் பெறலாம்.

## பக்தர்களுக்கு அன்பான வேண்டுகோள்

### அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில் புதிய திருப்பணி வேண்டுகோள்

- திருக்கோயிலில் முன், பின் நிழற்கூரை / மண்டபம் அமைத்தல்.
- திருக்கோயிலில் பக்தர் வரிசை அமைப்பு அமைத்தல் மற்றும் நிழற்கூரை அமைத்தல்.
- வாகனம் நிறுத்தும் இடம் அமைத்தல்.
- சூரிய ஒளி மின்சார அமைப்பு ஏற்படுத்துதல்.
- பக்தர்கள் தங்கும் மண்டபம் அமைத்தல்.

### ஸ்தல வரலாறு

இத்திருக்கோயில் பற்றிய ஸ்தல வரலாறு புத்தகம் திருக்கோயில் டிக்கெட் கவுண்டரில் ரூ. 30/-க்கு விற்பனைக்கு உள்ளது. விருப்பம் உள்ளவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

### மழை நீர் சேகரிப்பு

முனைப்போடு செயல்படும் மாண்புமிகு முதல்வர் வழியில்
முத்தான மழை நீரை சேகரிப்போம்!
இத்திருக்கோயிலில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்
ஏற்படுத்தப்பட்டுள்ளது

மழை நீர்! உயிர் நீர்!

### திருப்பணி தொடர்புக்கு

செயல் அலுவலர்,
அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயில்,
குதிரைமொழி கிராமம், தேரிக்குடியிருப்பு,
திருச்செந்தூர் வட்டம், அஞ்சல்- 628 205
☎:04639-232530



## அருள்மிகு கற்குவேல் அய்யனின் அருள் பெற அனைவரும் வருக !




tnhrce.org